SRI DURGADEVI DEVASTHANAM INC
Inc. in NSW Registration Number: INC 9878192 ABN: 55768913767
21 – 23 Rose Crescent Regents Park 2143 Tel No. 9644 6682 9746 9724
www.sydneydurga.com

# சைவ சமய அறிவுப் போட்டி

## அதிமேற்பிரிவு

## (15 வயதிற்கு மேல்)

**மாதிரிக்கேள்விகள்**

| | | |
|---|---|---|
| 1 | சிவபெருமான் முழுமுதற் கடவுளாக வழிபடுபவர்களை எப்படி அழைப்பீர்கள்? | சைவர்கள் என அழைப்போம் |
| 2 | வணக்கத்திற்கு உரியவர்கள் என்று சைவசமயம் எவர்களைக் குறிக்கின்றது. | கடவுள், தாய், தந்தை, குரு, பெரியோர், எமக்கு அன்பைச் செலுத்தும் அனைவரும் வணக்கத்திற்கு உரியவர்கள். |
| 3 | சைவசமய அறிவுப் போட்டியை இந்தக் கோயில் நடத்துவதன் முக்கிய குறிக்கோள் எது என்று நினைக்கிறீர்கள்? | புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் வருங்காலத் தலைமுறையினர் அதாவது எங்களைப் போன்ற குழந்தைகளிடம் கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதுடன் சைவ அறிவையும் சமயத்தையும் வளர்க்க ஊக்குவிப்பதே அதன் குறிக்கோள். |
| 4 | சைவசமய அறிவுப் போட்டியை நடத்துவதால் உங்களுக்கு ஏற்படும் நன்மைகள் எவை? | சமய அறிவு, கடவுள் நம்பிக்கை, பாரம்பரிய வழிபாட்டு முறைகள் பற்றிய விளக்கம், சமயத்தை வளர்த்த பெரியோர்கள் பற்றிய விளக்கம் ஆகியவை நாம் பெறக்கூடிய நன்மைகள் ஆகும். |
| 5 | எமது சமயத்தின் நோக்கம் எது? | ஆன்மாக்கள் மும்மலங்களை நீக்கிக் கடவுளை அடைய வழிகாட்டுதல் ஆகும். |
| 6 | பிற உயிர்களுக்கு என்ன செய்தால் எமக்குக் கூடிய பேரானந்தம் கிடைக்கும் என்று சைவசமயம் வலியுறுத்துகின்றது? | எல்லா உயிர்கள் மேலும் பிரதிபலன் கருதாத தூய அன்பைச் செலுத்தவேண்டும் என்று சைவசமயம் வலியுறுத்துகின்றது. |
| 7 | ஆதியும் அந்தமும் இல்லாத மெய்ப் பொருளைச் சைவ சமயம் எப்படிக் கூறுகிறது? | இறைவன் - கடவுள். |
| 8 | சிவபெருமானின் அருட்சிவ வடிவங்கள் எத்தனை? | சிவபெருமானின் வடிவங்கள் 25 அருட்சிவ மூர்த்தங்களெனக் கொள்ளப்படுகின்றன. |
| 9 | சிவபெருமானின் அருட்சிவ வடிவங்கள் ஒவ்வொன்றும் எத்தகையது? | சிவபெருமானின் அருட்சிவ வடிவங்கள் ஒவ்வொன்றும் சிவசத்தி வடிவமாகும். |
| 10 | இறைவன் எதற்காக உருவநிலையில் வைத்து வணங்கப்படுகிறான்? | இறைவனை மனதில் நினைத்தற்காகவும் மனம், மொழி, மெய்யினால் வணங்குவதற்காகவும் திருவுருவம் தாங்குவதால் இறைவனை உருவ நிலையில் வைத்து வணங்குகின்றோம். |
| 11 | திருக்கேதீச்சரத்தில் எழுந்தருளியிருக்கும் இறைவன் - இறைவியரின் பெயர்களைக் கூறுக. | கேதீச்சரநாதர் – கௌரி அம்மை. |
| 12 | திருக்கைலாய மலையில் நசிக்கப்பட்ட இராவணன் என்ன இசை பாடி சிவபெருமானிடம் இருந்து அருள் பெற்றான்? | சாமகானம் |
| 13 | உயிர்களுக்கு அழிவு உண்டா இல்லையா என்பதைப் பற்றிச் சைவ சித்தாந்தம் என்ன கூறுகிறது? | உயிர்களுக்கு அழிவு இல்லை என்று சைவசித்தாந்தம் கூறுகிறது. |

| | | |
|---|---|---|
| 14 | திருநல்லூர்ப் பெருமணம் என்னும் ஊரிலே திருஞானசம்பந்தருக்கு என்ன அற்புதம் நடந்தது? | திருஞானசம்பந்தர் திருமணமாகித் தம்பதிகளாய் உறவினருடன் திருநல்லூர்ப் பெருமணம் எ்னனும் கோயிலில் வழிபட்டு "காதலாகிக் கசிந்து....." என்னும் பதிகத்தைப் பாடவும் இறைவன் அருளால் சோதியாக ஒரு பேரொளி தோன்றியது. "எல்லோரும் பேரொளியிற் கலந்து கொள்ளுங்கள்" என்று ஒரு அசரீரி கேட்டது. திருஞானசம்பந்தருடன் எல்லோரும் சோதிக்குளே சென்று சோதியிற் கலந்தனர். |
| 15 | கோயில் அமைப்பு எதை விளக்குகின்றது? | மனிதன் ஒருவன் நிலத்திலே நேராகப் படுத்திருக்கின்ற அமைப்பினை எமது உடலை விளக்குகின்றது. |
| 16 | கோயிலின் பிரதான பகுதியான கருப்பக்கிருகம் மனிதனின் எந்தப் பகுதியைக் குறிக்கின்றது? | மனிதனின் சிரசினைக் குறிக்கின்றது. |
| 17 | இராச கோபுரம் மனிதனின் எந்தப் பகுதியைக் குறிக்கின்றது? | இராச கோபுரம் மனிதனின் பாதங்களைக் குறிக்கின்றது. |
| 18 | குண்டலினி சத்தி என்பது யாது? | எம்மிடையே மறைந்திருக்கும் தெய்வீகச் சத்தியே குண்டலினி சத்தி எனப்படும். |
| 19 | மனிதனின் முள்ளந் தண்டு எலும்பின் அடிப்பாகம் எந்தச் சத்தியின் இருப்பிடம்? | குண்டலினி சத்தியின் இருப்பிடமாகும். |
| 20 | கொடிமரத்தின் அடிப்பகுதி எதைக் குறிக்கிறது? | கொடிமரத்தின் அடிப்பகுதி அருவ நிலையில் இருக்கும் விநாயகரைக் குறிக்கும். |
| 21 | கொடிமரத்திலே காணப்படும் கொடிச் சீலையும் தருப்பைக் கயிறும் எவற்றைக் குறிப்பிடுகின்றன? | கோடிமரத்திலே காணப்படும் கொடிச்சீலை ஆன்மாவையும் தருப்பைக் கயிறு பாசத்தையும் குறிப்பிடுகின்றன. |
| 22 | கோவில் உள்ளே நீங்கள் பார்க்கும் நான்கு முக்கிய பொருள்கள் கூறுக. | தெய்வ விக்கிரகங்கள், கொடிமரம், நந்தி, விளக்குகள், மணி, சிற்பங்கள், பலிபீடம் |
| 23 | கோயிலை அடைந்ததும் எதைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும்? | கோயில் கோபுரத்தைப் பார்த்து முதலில் கும்பிட வேண்டும். |
| 24 | கோயிலுக்கு ஒருவர் ஏன் செல்ல வேண்டும்? | மன அடக்கத்தை ஏற்படுத்தவும், வழிபாடு செய்யவும், நற்பழக்கங்களை வளர்ப்பதற்கும் கோயில் செல்வது நன்று. |
| 25 | சைவசமயக் கதைகளைக் கொண்ட புராணங்கள் எமக்கு எவற்றை உணர்த்துகின்றன? | அதருமத்தை நீக்கித் தருமத்தை நிலைநாட்டும் பொருட்டு இறைவன் திருவிளையாடல்களையும், உலக நீதிசார்ந்த அறிவுரைகளையும் வாழ்க்கைக்குத் தேவையான நல்ல பண்புகளையும் எமக்கு உணர்த்துகின்றன. |
| 26 | சமயக் கல்வி ஒருவருக்கு அவசியமா? ஏன்? | ஆம். சிறந்த வாழ்வு வாழ வழிகாட்டுவது சமயக் கல்வியாகும். |
| 27 | சமயக் கல்வியினால் என்ன நன்மைகள் ஏள்படும்? 5 கூறுக. | மனதைத் தூய்மைப் படுத்தும், கடவுள் நம்பிக்கை வளரும், மன அடக்கம் ஏற்படும். ஒருவனை நல்லவனாக்கும். நல்ல பண்புகளை வளர்க்கும். களவெடுத்தல் பொய் பேசுதல் புலால் உண்ணல் உயிர்களைக் கொல்லுதல் முதலிய தீய செயல்களை வெறுக்கச் செய்யும். பிற உயிர்களை நேசிக்கும் சிறந்த குணத்தை வளர்க்கும். தியாக சிந்தை உண்டாகும். நல்ல வாழ்வு வாழத் துணை செய்யும். |

| | | |
|---|---|---|
| 28 | கல்வி கற்பதோடு சமயக் கல்வி கற்பதனால் என்ன நன்மை ஏற்படும்? | கல்வி ஒருவரின் அறிவை வளர்க்கிறது. சமயக் கல்வி ஒருவருக்கு கடவுள் நம்பிக்கையை வளர்ப்பதுடன் வாழ்க்கைப் பயனை அடைய – கடவுளை அடையத் - துணை செய்கிறது. கடவுளிடத்தில் அன்பை வளர்க்கிறது. இதன் பயனாகப் பிற உயிர்களிடத்திலும் அன்பு செலுத்தும் மனப்பான்மையை வளர்க்கிறது. |
| 29 | "வேழ முகத்து விநாயகனைத்தொழ .... "என்று ஆரம்பிக்கும் முதுமொழியைப் பூர்த்தி செய்யவும். | வேழ முகத்து விநாயகனைத்தொழ வாழ்வு மிகுத்து வரும். |
| 30 | பஞ்சபுராணத்தில் பாடப்படவேண்டிய பாடல்கள் எந்த ஒழுங்குமுறையிற் பாடப்படவேண்டும்? | தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம் என்ற ஒழுங்கு முறையில் பாடப்படவேண்டும். |
| 31 | சைவசித்தாந்தம் உமாதேவியாரை எப்படிக் கொள்கிறது? | சிவனின் மாபெரும் சத்தியாகக் கொள்கிறது. |
| 32 | சிவபெருமான் வலப்பாகமாகவும் உமாதேவியார் இடப்பாகமாகவும் விளங்கும் சிவசத்தி வடிவத்தை எவ்வாறு அழைப்பீர்கள்? | அருத்தநாரீசுவரன், உமையொருபாகன், ஐக்கியநாதன். |
| 33 | சிவபெருமானிடம் இறவாத வரம் பெற்ற கயமுகாசுரனை விநாயகப் பெருமான் கடைசியில் என்ன செய்தார்? | கயமுகாசுரனின் ஆணவத்தை ஒழித்து பெருச்சாளி உருவமாக மாற்றித் தனது வாகனமாக்கினார். |
| 34 | திருமால் சிவபெருமானின் ஓர் சத்தி என்று கூறுவது சரியா? | சரி |
| 35 | திருமாலின் ஐம்படை எவை? | வில், வாள், தடி, சங்கு, சக்கரம் |
| 36 | முருகக் கடவுள் எவ்வாறு தோன்றினார்? | சிவபெருமானின் நெற்றிக் கண்களில் இருந்து புறப்பட்ட 6 தீப்பொறிகளும் சரவணப்பொய்கையை அடைந்ததும் ஆறு திருக்குமாரர்களாக உருவெடுத்தன. ஆறு முகங்களும் பன்னிரு தோள்களும் கொண்ட அழகிய தோற்றத்துடன் முருகப்பெருமான் தோன்றினார். |
| 37 | முருகப் பெருமானின் ஆறுபடை வீடுகள் எவை? | பழனி, சுவாமிமலை, பழமுதிர்சோலை, திருச்செந்தூர், திருப்பரங்குன்றம், திருத்திணிகை. |
| 38 | அப்பர் பெருமான் - திருநாவுக்கரசு நாயனார் - சூலை நோயால் வருந்திய பொழுது அவரின் தமக்கையாராகிய திலகவதியார் எப்படி அந்த நோயை மாற்றினார்? | அப்பர் பெருமானுக்கு முதலில் திருநீறு பூசியபின்னர் திருவதிகைக் கோயிலுக்குக் கூட்டிச் சென்றார். அங்கே அப்பர் "கூற்றாயினவாறு விலக்ககலீர்..." என்ற பதிகத்தைப் பாடிமுடித்ததுடன் நோயும் மாறிவிட்டது. |
| 39 | சிவ சின்னங்கள் எவை? | விபூதி – திருநீறு – சந்தனம் குங்குமம் உருத்திராட்சம். |
| 40 | சைவசமயத்தில் எத்தனை கடவுள் - கடவுள்கள் - இருக்கிறார்கள். | சைவசமயத்தின் கடவுள் சிவபெருமான் ஒருவரே ஆவர். |
| 41 | சைவர்கள் கடவுள் பலரை வழிபடுகிறார்களே. இதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்? | உயிர்களுக்கு அருள் புரியும் வண்ணம் சிவபெருமான் பலவிதமான வடிவங்களை - மூர்த்தங்களை – எடுக்கிறார். அவற்றை நாம் பல்வேறு உருவங்களாக வழிபடுகிறோம். |
| 42 | சிவம் என்பதன் பொருள் என்ன? | செம்மை – மங்கலம் என்பது அதன் பொருள் ஆகும். |

| | | |
|---|---|---|
| 43 | சிவபெருமானின் மூன்று விதமான விக்கிரக வடிவங்களைக் கோயில்களில் காணலாம். அவை யாவை? | இலிங்கம், நடராசர் (நடராஜர்) தட்சணாமூர்த்தி |
| 44 | இறைவன் ஐந்தொழில்களை எவ்வண்ணம் நிகழ்த்துகிறார்? | இறைவன் ஐந்தொழில்களையும் பிரம்மா, விட்டுணு (விஷ்ணு), உருத்திரன், மகேசுவரன் (மகேஷ்வரன்) சதாசிவன் ஆகிய திருமேணிகளைத் தாங்கி நிகழ்த்துகிறார். |
| 45 | இறைவன் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு எத்தனை விதமான திருமேனிகளை எடுத்து அருள் புரிகிறார்? ஆவைகளைக் கூறவும்? | இறைவன் ஆன்மாக்களை உய்விக்கும் பொருட்டு மூன்று விதமான திருமேனிகளை எடுத்து அருள் புரிகிறார். ஆவை அருவத் திருமேனி, உருவத் திருமேனி, அருவுருவத் திருமேனி ஆகும் |
| 46 | அருவத் திருமேனி என்றால் என்ன? | இது சிவ அடியார்களுக்குத் தனது உருவம் தெரியாவண்ணம் அருள் புரிய அவன் எடுக்கும் அருட்சத்தி வடிவம். |
| 47 | உருவத் திருமேனி என்றால் என்ன? | இது சிவ அடியார்களுக்கு தனது உருவம் தெரியும் வண்ணம் அருள் புரிய அவன் எடுக்கும் அருட்சத்தி வடிவம். |
| 48 | நாற்பாதம் என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிக்கும்? | சுரியை, கிரியை, யோகம், ஞானம். |
| 49 | ஐம்பெரும் பாதகம் என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிக்கும்? | கோலை, களவு, கள், பொய், குருநிந்தை |
| 50 | பஞ்சகவ்வியம் என்னும் தொகைச் சொல் எவற்றைக் குறிக்கும்? | கோசலம், கோமயம், பால், தயிர், நெய் |
| 51 | ஆறு வகைச் சமயம் கூறுக. | சைவம், வைணவம், சாக்தம், சௌரம், காணாபத்தியம், கௌமாரம் |
| 52 | எட்டுதிக்குப் பாலகர் யாவர்? | இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன். |
| 53 | நவராத்திரியின் சிறப்பு என்ன? | துர்க்கை அம்மன், இலக்குமி(லக்ஷ்மி)(இலச்சுமி) தேவி சரசுவதி(சரஸ்வதி)தேவி ஆகிய மூன்று சத்திகளையும் வழிபடுவதே நவராத்திரியின் சிறப்பு ஆகும். |
| 54 | மாசி மகத்தின் சிறப்பு என்ன? | அம்மனுக்குரிய விசேட நாள் மாசி மகம். அன்று அம்மனுக்கு தீர்த்தம், விசேட பூசை நடைபெறும். |
| 55 | பங்குனி உத்தரத்தின் விசேடம் என்ன? | பங்குனி உத்தர நாளன்று கோயில்களில் சிவபெருமானுக்கும் பார்வதிக்கும் அபிடேகம் (அபிஷேகம்) விசேட பூசை செய்யப்படும். |

| | | |
|---|---|---|
| 56 | ஏடு தொடக்கம் வைபவத்தைப் பற்றி உமக்குத் தெரிந்தவற்றைக் கூறுக. | விசயதசமி (விஜயதசமி) நாளன்று கோயிலில் அல்லது வீட்டில் கோயில் குருக்களைக் கொண்டோ அல்லது கல்வியிற் சிறந்த பெரியவர்களைக் கொண்டோ சிறுபிள்ளைகளுக்கு ஏடு தொடக்குவார்கள். வீட்டில் இருக்கும் பெரியவர்களைக் கொண்டும் சிலர் ஏடு தொடக்குவார்கள். கல்விக்கு அதிபதியான சரசுவதி தேவியை வணங்கியபின் தமிழ் எழுத்துகள் கொண்ட ஏட்டை அல்லது அரிவரிப் புத்தகத்தை எடுத்து ஏடு தொடக்கப்பட வேண்டியவரின் சுட்டு விரலால் "அ" விலிருந்து எல்லா எழுத்துகளையும் தொட்டு அவற்றை உச்சரித்துச் சொல்ல வைப்பார்கள். மஞ்சள் பூசப்பட்ட அரிசியில் அந்த எழுத்துகளைச் சுட்டுவிரலால் எழுத வைப்பார்கள். 1, 2, ... என்ற எண்களையும் ஆங்கில எழுத்துகளையும் சொல்லச் செய்வார்கள். |
| 57 | நவராத்திரி கொண்டாடப்படுவது ஏன்? | வீரத்தை வேண்டித் துர்க்கை அம்மனையும், செல்வத்தை வேண்டி இலக்குமி தேவியையும், கல்வியை வேண்டிச் சரசுவதி தேவியையும் தொழுது கொண்டாடப்படும் விழா நவராத்திரி எனப்படும். |
| 58 | சரசுவதி (சரஸ்வதி) அந்தாதி பாடிய புலவர் பெயர் கூறுக. | கவிச்சக்கரவர்த்தி கம்பர் |
| 59 | தீபாவளி எதற்காகக் கொண்டாடப்படுகிறது? | கிருட்ண (கிருஸ்ண) பரமாத்மாவுடன் போர்புரிந்து இறக்கும் வேளையில் நரகாசுரன் பகவானிடம் ஒரு வரம் கேட்டான். தனது ஆணவம் - அகந்தை ஒழிந்த அந்த நல்ல நாளை உலகில் எல்லோரும் கொண்டான அருள்புரிய வேண்டும் என்று வரம் கேட்டான். பகவானும் அதற்கு அருள் புரிந்தார். அந்த நாள் தீபாவளி என்று கொண்டாடப்படுகிறது. |
| 60 | விரதத்தில் சிறந்த விரதம் எது? | பிற உயிர்களைக் கொல்லாமையே சிறந்த விரதம் ஆகும். |
| 61 | கூட்டுப்பிரார்த்தனையின் 3 நன்மைகள் கூறுக. | மன அமைதி, மன ஒருமைப்பாடு, கடவுள் சிந்தனை, கடவுள் நம்பிக்கை ஆகியவை வளருவும் மாணவர்களிடையே ஒழுக்கம், ஒற்றுமை வளரவும் வழி செய்கிறது. |
| 62 | சமய தீட்சை என்றால் என்ன? | சைவசமயத்தவர்கள் தகுந்த குருவிடம் மந்திரங்களை முறைப்படி உச்சரிக்கவும் விபூதி தரித்து அநுட்டானங்களை ஆரம்பிப்பதற்கும் செய்யப்படும் ஒரு புனிதமான சடங்கு |
| 63 | எந்த அரசனின் வேண்டுகோளின் படி நம்பியாண்டான் நம்பி திருமுறைகளைத் தொகுத்தார்? | இராசராசசோழ (இராஜராஜசோழ) அரசனின் வேண்டுகோளின் படி திருமுறைகளைத் தொகுத்தார். |
| 64 | கந்தசட்டி (கந்தசஷ்டி) 6ஆம் நாளில் என்ன விசேட திருவிழா கொண்டாடப்படுகிறது? | சூரசங்காரம் |
| 65 | சூரசங்காரத்தின் போது என்ன நடந்தது? | முருகக் கடவுளால் சூரபன்மனின் ஆணவம் அழிக்கப் பட்டதும் சிவனிடமிருந்து அழியா வரம்பெற்ற சூரபன்மன் சேவலும் மயிலுமாகத் தோன்றி முருகப் பெருமானிடம் அடைக்கலம் பெற்றான். முருகப் பெருமான் சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் ஏற்று அருள் புரிந்தார். |

| | | |
|---|---|---|
| 66 | நாம் எப்பொழுது நிறைகுடம் வைக்கிறோம்? 3 நிகழ்சிகள் கூறுக. | திருமணம், புதுமனை புகல், நவராத்திரி, கலை விழாக்கள், மங்களகரமான நிகழ்ச்சிகள் |
| 67 | திருநாவுக்கரச நாயனார் சமண சமயத்தில் சேர்ந்து என்ன பெயர் பெற்றார்? | தருமசேனர் என்ற பெயர் பெற்றார். |
| 68 | சரியைத் தொண்டுகள் என்றால் என்ன? 3 கூறுக. | ஆலயத்தில் செய்யப்படும் சேவைகள், சரியைத் தொண்டுகள், கூட்டுதல், கழுவுதல், புந்தோட்டம அமைத்தல், பூப்பறித்தல், பூமாலை கட்டுதல், தீபங்கள் வாகனங்கள் கழுவுதல் |
| 69 | பெரியபுராணத்தைப் பாடி அருளியவர் யார்? | சேக்கிழார் பெருமான் |
| 70 | பெரியபுராணம் யாருடைய வரலாற்றைக் கூறுகிறது? | 63 நாயன்மார்களின் வரலாற்றை திருத்தொண்டர்களின் வரலாற்றை கூறுகிறது. |
| 71 | பெரியபுராணத்தில் இடம்பெற்ற பெண்சிவனடியார்கள் பெயர் 2 கூறுக. | காரைக்கால் அம்மையார், திலகவதியார், மங்கையற்கரசியார் |
| 72 | சிவபெருமானிடத்தில் தனக்குப் பேய்வடிவு தரும்படி கேட்டுப் பெற்றுக் கொண்டவர் யார்? | புனிதவதியார் – காரைக்கால் அம்மையார் |
| 73 | பாண்டியமன்னனுக்கு உண்டான நோய் என்ன? ஆதை நீக்கியருளியவர் யார்? எப்படி நீக்கினார்? | வெப்புநோய்<br>திருஞானசம்பந்தர் நீக்கினார்<br>“மந்திரமாவது நீறு” என்று தொடங்கும் பதிகம் பாடி திருநீறு தடவி நீக்கினார். |